| ந.க.எண். நுபா2 / 15137 / 2009 | உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,<br>ஆணையாளர் அலுவலகம்,<br>சேப்பாக்கம், சென்னை 600 005.<br>நாள் 05 / 01 / 2010. |
|---|---|

## அறிவிப்பு சுற்றறிக்கை

பொருள்: உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை - நுக.ர்வோர் பாதுகாப்பு விருதுகள் - 2008ம் ஆண்டிற்கான நுகர்வோர் பாதுகாப்பு விருதுகள் – தேர்வுக் குழு - தீர்மானங்கள் – வெற்றியாளர்கள் பெயர்களை அறிவித்தல் – தொடர்பாக.

பார்வை

1. அரசாணை எண்.723. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (எச்2)துறை. நாள் 29/10/2008.
2. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் எண். நுபா2 / 15137 / 2009, நாள் 08/09/2009.
3. அரசாணை (வாலாயம்) எண்.489, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29/10/2009.

பார்வையில் கண்டுள்ள அரசாணையில் 2008ம் ஆண்டிற்கான மாநில நுகர்வோர் பாதுகாப்பு விருதிற்கான தேர்வுக் குழு உறுப்பினர்களை நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது. இவ்வாணையில் தேர்வுக் குழுவின் அலுவல் சாரா உறுப்பினர் ஒருவரை நியமனம் செய்யும் அதிகாரம் தேர்வுக் குழு தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. தேர்வுக் குழு தலைவர் நியமனம் செய்த உறுப்பினரையும் சேர்த்து 2008 மாநில நுகர்வோர் பாதுகாப்பு தேர்வுக் குழு உறுப்பினர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | ஆணையாளர் , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை & தலைவர், தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் ( TANSSCOPE ) | தலைவர் |
| 2 | இணை ஆணையாளர், , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை & செயலாளர், தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் ( TANSSCOPE ) | உறுப்பினர் - செயலர் |
| 3 | இணை / துணை செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை & உறுப்பினர் , தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் ( TANSSCOPE ) | உறுப்பினர் |
| 4 | துணை ஆணையாளர் , உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை & இணைச் செயலாளர், தமிழ்நாடு மாநில நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் அதிகாரச் சங்கம் ( TANSSCOPE ) | உறுப்பினர் |
| 5 | திரு. க. சுப்பராயன், செயலாளர், தமிழ்நாடு பயனீட்டாளர் சங்கம், நாமக்கல் மாவட்டம் | உறுப்பினர் |

சிறந்த மாவட்டம், சிறந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர் மற்றும் சிறந்த குடிமக்கள் நுகர்வோர் மன்றம் ஆகிய மூன்று வகைகளுக்கு தலா மூன்று பரிசுகள் வழங்கப்படும். 3 வகை விருதிற்கான நியமன விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. வரப்பெற்ற நியமன விண்ணப்ப படிவங்களின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | விருது வகைப்பாடு | வரப்பெற்ற முன்மொழிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு மற்றும் பொது விநியோக திட்டம் தொடர்பான பணிகளில் நற்பணிபுரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட சார்நிலை அலுவலர்கள் | 8 |
| 2 | நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளில் நற்பணிபுரிந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர் | 25 |
| 3 | நன்முறையில் செயல்பட்டு வரும் குடிமக்கள் நுகர்வோர் மன்றம் | 154 |

**தீர்மானங்கள்**

**தீர்மானம் 1**

வரப்பெற்ற நியமன விண்ணப்பங்களை பரிசீலனை செய்த தேர்வுக்குழு தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர்கள் மற்றும் குடிமக்கள் நுகர்வோர் மன்ற ஆசிரியர் கள் ஆற்றியுள்ள சேவைகளுக்கு பாராட்டுதலை தெரிவிக்கின்றது.

**தீர்மானம் 2**

சிறந்த மாவட்டத்திற்கான நியமன விண்ணப்பங்கள் 8 மாவட் ஆட்சித் தலைவர்கள் மட்டுமே அனுப்பி வைத்துள்ளனர். நாமககல் மற்றும் திருச்சி தவிர ஏனைய 6 மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அவர்கள் ஆற்றிய பணிகள் / சேவைகள் குறித்து ஆதார ஆவணங்கள் அதாவது பத்திரிக்கை செய்தி / புகைபடங்கள் முதலியன ஏதும் இணைத்து அனுப்பி வைக்கவில்லை. எனவே மூன்றாம் பரிசு எந்த மாவட்டத்திற்கும் வழங்க தேவையில்லை என தேர்வுக் குழு தீர்மானம் நிறைவேற்றியது.

**தீர்மானம் 3**

சிறந்த தன்னார்வ நுகர்வோர்அமைப்பின் ஆர்வலர்கள் விருதிற்கு மாநிலம் முழுவதிலுமிருந்து 25 நியமன விண்ணப்பங்கள் வந்திருந்தன. இதில் ஏற்கனவே முந்தைய ஆண்டுகளில் விருதினை வென்ற வெற்றியாளர்கள் சிலர் இவ்வாண்டின் விருதிற்கும் நியமன விண்ணப்பங்கள் அளித்துள்ளனர். எவ்வித தொய்வின்றி நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கல்வி குறித்த சேவைகள் இவ்வெற்றியாளர்கள் தொடர்ந்து நன்முறையில் ஆற்றி வருகின்றனர் என்பது பாராட்டிற்குரியது. புதிய ஆர்வலர்களை தேர்வு செய்தவன் மூலம் வருங்காலங்களில் பல புதிய ஆர்வலர்கள் முனைப்புடன் சேவை ஆற்றிட வருவார்கள் என தேர்வுக் குழு கருதுகின்றது. எனவே ஒருமுறை விருது வென்ற வெற்றியாளர் பெயர் அடுத்த 5 ஆண்டுகள் கழிந்த பின்னரே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது என்றும் இவ்வாண்டின் வெற்றியாளர்கள் போக மீதமுள்ள நியமன விண்ணப்பதாரர்கள் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 4**

2008ம் ஆண்டின் பின்பாதியில் கல்லூரிகளில் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் தொடங்கப்பட்டன. 2008ம் ஆண்டிற்கான சிறந்த குடிமக்கள் நுகர்வோர் மன்ற விருதிற்கு வரப்பெற்ற 154 நியமன விண்ணப்பங்களில் சில கல்லூரிகளும் விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தன. எனவே இவ்வாண்டிற்கு இரண்டு பள்ளிகள் மற்றும் ஒரு கல்லூரிக்கு விருது வழங்குவது என்றும் வெற்றி பெற்றவர்கள் தவிர ஏனையோருக்கு பங்கேற்பு சான்றிதழ் வழங்குவது என்றும் அடுத்த ஆண்டிற்கு 3 பள்ளிகள் 3 கல்லூரிகள் என 6 பரிசுகள் வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்கண்ட தீர்மானங்களை பின்பற்றி 2008ம் ஆண்டிற்கான மாநில நுகர்வோர் பாதுகாப்பு விருதிற்கு வரப்பெற்ற விண்ணப்பங்களை ஆழ்ந்து பரிசீலனை செய்த தேர்வுக் குழு 2008 மாநில நுகர்வோர் பாதுகாப்பு விருது வெற்றியாளர்கள் பெயர்களை கீழ்க்கண்டவாறு அறிவிக்கின்றது.

.....3/-

## நுகர்வோர் பாதுகாப்பு விருதுகள் 2008

| 1. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு மற்றும் பொது விநியோக திட்டம் தொடர்பான பணிகளில் நற்பணிபுரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட சார்நிலை அலுவலர்கள் | |
|---|---|
| **முதல் பரிசு** | **நாமக்கல் மாவட்டம்** |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | திரு. கோ. சுந்தரமூர்த்தி, இ.ஆ.ப., (01/01/2008 முதல் 08/06/2008 வரை)<br>திரு. உ. சகாயம், இ.ஆ.ப., ( 09/06/2008 முதல் இன்று வரை) |
| மாவட்ட வருவாய் அலுவலர் | திரு. கு. கோவிந்தராஜ், எம். ஏ., ( 01/01/08 முதல் 21/06/2009 வரை)<br>திருமதி. கி. சாந்தி, பி.எஸ்ஸி., (22/06/09 முதல் இன்றுவரை) |
| மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் | திரு. து. ரவீந்திரன் பி.ஏ., (01/01/2008 முதல் இன்று வரை) |
| **இரண்டாம் பரிசு** | **திருச்சி மாவட்டம்** |
| மாவட்ட ஆட்சித் தலைவர் | திரு. ஆஷிஷ் வச்சானி, இ.ஆ.ப., (01/04/2007 முதல் 01/03/2008 வரை)<br>திரு. தா. சவுண்டையா, இ.ஆ.ப., ( 02/03/2008 முதல் இன்று வரை) |
| மாவட்ட வருவாய் அலுவலர் | திரு. அ. நம்பிராசன் , எம். காம்., ( 07/03/07 முதல் 06/06/2008 வரை)<br>திருமதி. ப. வெங்கடபிரியா, எம்.எஸ்ஸி., (13/06/08 முதல் 05/03/2009) |
| மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் | திரு. மு. லட்சுமிகாந்தன், எம்.ஏ., (01/01/2008 முதல் 31/05/2008 வரை)<br>திரு. ஜி. இராஜசேகரன், (01/06/2008 முதல் 31/05/2009 வரை) |
| **மூன்றாம் பரிசு** | **எவருக்கும் இல்லை** |

| 2. நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பணிகளில் நற்பணிபுரிந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஆர்வலர் | |
|---|---|
| முதல் பரிசு | திரு. டி.ஏ. பிரபாகர், M.A., M.L.,<br>செயலாளர்,<br>திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்,ஹ<br>47, சங்கர் காலனி, பாளையங்கோட்டை,<br>திருநெல்வேலி மாவட்டம் |
| இரண்டாம் பரிசு | திரு. எம். செல்வராஜ்,<br>துணைத் தலைவர்,<br>தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி நுகர்வோர் அமைப்புகளின் கூட்டமைப்பு,<br>604, C. T. H. ரோடு, பட்டாபிராம், சென்னை 600 072. |
| மூன்றாம் பரிசு | திருமதி. எஸ். சகுந்தலா,<br>தலைவர்,<br>திருச்சி பயனீட்டாளர் இயக்கம்,<br>சி 144, கம்பர் தெரு, அண்ணா நகர்,<br>தென்னூர், திருச்சி 17 |

| சிறந்த குடிமக்கள் நுகர்வோர் மன்றம் | |
|---|---|
| **முதல் பரிசு** | **சங்கர் மேல்நிலைப் பள்ளி,<br>சங்கர் நகர், திருநெல்வேலி** |
| தலைமையாசிரியர் | திரு. உ. கணேசன், M.Sc., M.Ed., M.hil |
| ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் | கவிஞர் கோ. கணபதி சுப்பிரமணியன், M.A., M.Ed., M.Phil. |
| தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் | திரு. டி.ஏ. பிரபாகர், M.A., M.L.,<br>செயலாளர்,<br>திருநெல்வேலி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்,<br>47எ, சங்கர் காலனி, பாளையங்கோட்டை |
| மன்ற மாணவர் தலைவர் | செல்வன். எஸ். மெல்வின் |
| மன்ற மாணவர் செயலாளர் | செல்வன். சண்முகம் |
| மன்ற மாணவர் பொருளாளர் | செல்வி. எஸ். சுதா |
| **இரண்டாம் பரிசு** | **ஜேசீஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி,<br>மூலப்பாளையம், ஈரோடு** |
| தலைமையாசிரியர் | திருமதி. கே. ரஜனி ராணி, M.A., B.Ed., |
| ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் | திரு. கே. சூர்ய பிரகாஷ், M.C.A., B.Ed.,<br>திருமதி. வி. உஷாராணி, M/Com/. M.Phil., B.Ed., |

.....4/-

| | |
|---|---|
| தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் | திரு. ஆர். பாலசுப்பிரமணியம் |
| மன்ற மாணவர் தலைவர் | செல்வன். எம். லோகேஷ் |
| மன்ற மாணவர் செயலாளர் | செல்வன். எஸ். ஜெயகண்டீஸ்வரர் |
| மன்ற மாணவர் பொருளாளர் | செல்வன். எஸ். இந்திரகுமார் |
| **மூன்றாம் பரிசு** | **குமாரசாமி பொறியியல் கல்லூரி, தளவாய்ப்பாளையம், கரூர் மாவட்டம்** |
| முதல்வர் | டாக்டர். D. வளவன், M.E., Phd., |
| ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் | திருமதி. சு. தமிழ்ச்செல்வி, M.Sc., M.Phil., HOD M.Sc., (IT) |
| தன்னார்வ நுகர்வோர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் | திரு. கே. கே. சொக்கலிங்கம் |
| மன்ற மாணவர் தலைவர் | செல்வன். எஸ். மோகன்ராஜ் |
| மன்ற மாணவர் செயலாளர் | செல்வன். எஸ். வினோத் |
| மன்ற மாணவர் பொருளாளர் | செல்வி. D. யாதவ்குமார் |

5/1/2010

தலைவர், விருது தேர்வுக் குழு
மற்றும்
ஆணையாளர் , உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

5/1/10

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
2. துணை ஆணையர்(நகரம்) வடக்கு / தெற்கு, சென்னை 5.
3. அனைத்து மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்கள்
4. ஆணையர் அலுவலக முகவரி பட்டியலில் இடம்பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள்
5. மாவட்ட அளவிலான முகவரி பட்டியலில் இடம்பெற்றுள்ள தன்னார்வ நுகர்வோர்ட அமைப்புகள் ( மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அல்லது வட்ட வழங்கல் அலுவலர் மூலமாக)
6. குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் நிறுவியுள்ள அனைத்து பள்ளி / கல்லூரிகள் ( மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அல்லது வட்ட வழங்கல் அலுவலர் மூலமாக)
7. நுவி பிரிவு கண்காணிப்பாளர் (இணையதளத்தில் வெளியிட)

குறிப்பு இந்த சுற்றறிக்கையின் நகல் கிடைக்கப்பெற்ற தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், அவர்கள் ஒருங்கிணைப்பு செய்து நடத்தக் கூடிய குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களுக்கு நகல் எடுத்து அனுப்பிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.